உ

கணபதி துணை.

# கோண நாயகர் அகவற்பா.



இஃது

திருக்கோணமலை

**ஸ்ரீமான். க. கனகசேகரன்**

அவர்களால்

இயற்றப்பட்டு,

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை,

ஸ்ரீசண்முகநாத யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமுக ௵ சித்திரை ௴. 1935

# முகவுரை.

ஸ்ரீ தெட்சண கயிலாய மெனவிளங்கும் திருக்கோணமலையானது, ஈழமண்டலமாகிய இலங்கா தீபத்தின் கிழக்கின்கண் உள்ள ஓர் திரு நகரமாகும். இதையே திருக்கோணமலை, திரிகோணமலை, திருக்கோணாசலம், திரிகோணாசலம் எனப்பலவாறு வழங்கி வருவர். இம்மலையையே எண்பத்துநாலு சதுர்யுகங்கட்குமுன் ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் இடையில் நடந்தவமரில் வாயுபகவானால் வெள்ளியங்கிரியினின்றும் பிடுங்கி யெறிந்துள்ள மூன்று திருமுடிகளுள் ஒன்றென்பர்-மற்றையவிரண்டும் திருசிராமலையும் திருக்காளத்தியுமாகும் - ஆதலினாலேயே, இவைகள் மூன்றையும் தென்கயிலாயமென வின்றுங் கூறுவர் - இத்திருப்பதியின் கண்ணேயே ஸ்ரீகயிலாயபதியாகிய கோணலிங்கப்பெருமான் மாதுமை சமேதராய் எழுந்தருளியிருந்து ஆன்மவர்க்கங்களனைத்தினுக்கும் அநுக்கிரகஞ் செய்வர் - இங்கேயே பாவநாசச்சுனையும், இராவணேசுரனாற் றன்றாயாருக்குக் கருமாதி செய்யும்பொருட்டுத் திருவருளால் உண்டாக்கப்பட்டுள்ள சூடு, இளஞ்சூடு, குளிரெனப் பலதிறத்தனவாகிய சத்த தீர்த்தங்களுமுண்டு. அகத்தியமகா முனிவர் தங்கியிருந்த கழனிமலையும், அகத்தியர் தாபனமென வழைக்கப்பட்டு வழங்கிவரும் திருக்கரைசையம்பதியும் இங்கேயுண்டு. கோயிற்றிரவியங்களால் நிறைவுண்டு, தேவதைகளாற் காவல் பூண்டுள்ள மத்தளமலை, நாகமலை, வெண்கல்மலை, வள்ளக்கல்மலையென நான்கு மலைகளுமுண்டு. திருமலையிற் சேமித்திருக்கும் திரவியங்களும், ஆபரணங்களும், சிந்தூரமும் பிறவும் எண்ணற்கரிய பெருந்தொகையினவாகும். இத்திருப்பதியைப் பண்டைக்காலத்தில் சேரசோழபாண்டிய வரசர்களும், ஏனையவரசர்களும் வந்து தரிசனைசெய்து போந்ததாகவும், அளவிறந்த திரவியங்களும், ஆபரணங்களும் கொடுத்துச் சென்றதாகவும் சரித்திரங் கூறும். அதுபோல வின்றும் குணகோள குடகோளங்களிலுள்ள தேயங்களிலிருந்து வரும் அரசர்களும், கோடி

சர்களும், தபோதனர்களும், பிறரும் தரிசனஞ்செய்து போகின்றனரென்பது யாருமறிந்த உண்மையாகும். இம்மலையை ஆங்கில வரசினர் அரண்படுத்திக், காவல்பூண்டு, ராணுவமமைத்து, யுத்ததளபாடங்களும் சேமித்து, நெடுங்காலம் வைத்திருந்தார்களாயினும், திருமலைத் தரிசனத்தின் பொருட்டுத் திங்கட்கிழமைகடோறும் வெள்ளிக்கிழமைகடோறும் செல்வார்க்கு இம்மியளவேனும் குறைபாடின்றி வேண்டிய வசதிகளும் சலாக்கியங்களும் இன்றுவரை அளித்துவருகின்றார்களென்பதோர் உலகப்பிரசித்தமாகும். இத்திருமலையின்கண் எழுந்தருளியிருக்குங் கோணலிங்கப் பெருமான்மீது நாயினுங் கடையேனாகிய யான் அன்போடு கூறுமிவ் வகவற்பாவைச் சிவதோத்திரமாதல்பற்றித் குற்றங்களிருப்பினுங் குறைகூறுதலின்றி யாவரும் அகமகிழ்ந்தன்போடு அங்கீகரிப்பரென்பதென் உள்ளக்கொள்கையாகும்.

இங்ஙனம்,

திருக்கோணமலை, **க. கனகசேகரன்.**

ஸ்ரீமுகவருஷ சித்திரைமீ.

உ

கணபதிதுணை,

சிவமயம்.

# கோணநாயகர் அகவற்பா.

A. ALAGACONE
... ON STREET
TRINCOMALEE

---

காப்பு

வெண்பா.

தென்கயிலை யீசர் திருத்தாள் பணிந்தகவ
லென்கைசிர மேற்கொண் டியம்பவெனக் — கின்றுதவு
மைங்கரத்து வேழ முகவ னரிமருகன்
செங்கரத்துக் கோடேந்துஞ் சேய்.

## நிலைமண்டல வாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

சீர்செறி கயிலையங் கிரியிற் றேவியொ
டோரரி யணைமிசை யோங்கு தென்திருக்
கோண நாயகனே! கோண நாயகனே!
கோணமா மலையுறை கோண நாயகனே!
ஆழிசூழ் புவியொடண் டங்களும் பிறவு
மேவிடு முயிர்களு மியங்க வெண்ணியுன்
பாலுள வருடனிற் பரிந்து பஞ்சகிர்த்
தியமவை சிருட்டி திதிசங் கார
திரோபவ மநுக்கிர கம்மெனச் செப்புமைந்
தொழிலையு மியக்கிச் சுரந்தினி தருளி
ஞாலத் தெழுந்துவந் தேயொரு ஞானா
சாரிய னாய்நவில் சத்தினி பாதத்
தோர்க்குமுன் னுளதொல் வினையெனக் கழறும்
மூலகா ரணமா மும்மல மதனை
வேறறக் களைவான் வேண்டி நிர்வாண
சட்சு மானச வாசிக திருவடி
யாயபல் தீக்கைக ளனைத்துங் கொடுத்துத்
தூயநற் பதமருள் தூயனே யபயம்,

வெள்ளியங் கிரியின் விளங்கு பொன்முடிக
ளொள்ளிய வாயிரத் திதுவொன் றாகும்
பையாயிர முடைப் பாம்பொடு வாயு
வெய்யபோ ரிட்டநாள் வீழ்த்திய திருமுடி
தென்கயி லாய மெனுந்திருப் பெயர்தற்
குண்டநாள் முதலென வுலகத் தேவரும்
வந்துகை சிரமேற் கூப்பி வணங்கிட
மந்திர சிம்மா சனத்திடை மாதுமை
பங்கின ராயருள் பரமனே யபயம்,
காவிரி மாவிலி கங்கைகங் காநதி
யாயவிவ் மூன்று மனவர தமுநின்
பாததா மரைவலம் பரவியோ டிடவருள்
நாதனே கோணநா யகனே யபயம்,
மாமலை தன்னின் மருங்கோர் சாரலிற்
பூமிசை யெவரும் புகழ்ந்து படிந்திடப்
பாவ விமோசனம் பரித்தவர்க் கருளும்
பாவ நாச மெனும்பகர் தீர்த்தமொன்
றுவலொ டருளிய வையனே யபயம்
காத மூன்றினிற் கன்னியாங் குமரி
தீர்த்தமு மளித்தருள் தெய்வமே யபயம்,
இமயமால் வரையி லின்னநாள் வதுவை
கயிலையம் பதிக்குங் கருணையம் பிகைக்கு
மென்றனர் கேட்டன ரெண்டிசை யுளாரும்
வந்தனர் குழுமினர் வையக மோர்புறந்
தாழ்வது கண்டு தயங்கின ரோல
மோல மென்றன ரும்பர்கட் கபய
மென்றெழு நஞ்சை யிடமிடற் றடக்குங்
கண்டநீ கருணைகூர்ந் தவையுறு கும்ப
மாமுனி தன்னை மகிழ்வுற நோக்கி
யின்றுதென் பொதியை யேகென விரங்கா
நின்று கன்றகல் புனிற்றா வென்னத்
துன்புறு வதுகண் டுயருறேல் யாமுனக்

கும்பரு மகிழ்வுற மங்கலச் சிறப்பின்
கண்கொணுக் காட்சியைக் காட்டுது மங்ஙன
மென்றருள் சிவனே யிறைவனே யபயம்,
வனப்புறு மாமலை வதுவைக் காட்சியை
முனிக்குமுன் னுரைத்த மொழிப்படி சிமய
மலைப்பதி யினில்வந் திருந்து மகிழ்ந்திட
விருப்பொடு காட்டிய விறையே யபயம்,
முனிக்கா செழுந்து முறைமுறை வணங்கி
மனத்துப ரறவக மகிழ்வொடு கடிதுதென்
றிசைதனை நோக்கிச் சேணுறச் சென்றுபுக்
கிடமலை மலயங் கிளருறு வடதென்
பாறுலை யொப்பப் பரிந்தவர் கண்டே
பார்சம ணுயதுன் செயலெனப் பதமலர்
வீழ்ந்தெழ வருளிய விமலனே யபயம்,
கும்பமா முனியநாட் கூறநும் பலபதி
வணங்கி யிம்மாமலை வந்தவ ரிருகாஞ்
சிரமௌ னின்றுரு கிச்சிவ சிவசிவ
ஹர ஹர ஹரவெனத் தொழுதக மகிழ்வொடு
மப்பனின் னருள்பெற் றப்பா லேகி
யகத்தியர் தாபன மெனவறைந் திடுதிருக்
காசையம் பதியிலிங் கத்தா பனஞ்செய்
திருந்துபூ சனைசெய விலிங்கத் தெழுந்தருள்
புரிந்திடு பொன்மலைக் கரசே யபயம்,
இலங்கை மாமன னிராவணே சுரனுள்
மலங்கியே கயிலை மலையைக் கொணர்வான்
பிடுங்கிய போதிடப் பாகத் திருந்துமை
நடுங்கிட வஞ்சுதி யெனநகைத் தூன்றிப்
பெருவிர லாலடப் பெருமலை போன்றவன்
விழுந்தனன் கலங்கினன் விரைந்துதன் பத்துச்
சிரங்களி லொன்றைத் தியங்கியே துணித்து
மீட்டனன் யாழினை வேத நாதநீ
கேட்டனை கீதப் பிரிய னுதலால்

மாட்டிடை யுமையுடன் மகிழ்ந்து தோற்றிமுன்
கேட்டிடு வரமுங் கிருபைகூர்ந் தளித்தீ
டேற்றிய கயிலைக் கிறையே யபயம்,
அந்தண னொருவ னந்நாளிலிம் மாமலை
வந்தடி பன்முறை வணங்கக் கண்டிடு
பூதத்தொன் றழைத் தேகொடு போயொரு
பொற்குகை தன்னைப் பொருந்தக் காட்டி
வைத்தன னும்மர சேறதை யவர்மகற்
கிப்பொழு தேபோ யியம்பிடிச் செய்தியென்
றுற்றவர் போலது வுரைப்பச் சென்றவன்
சொற்றன னரசனுந் தொழுகரத் தொடுவருட்
டிறமென மதுரைவிட் டேகியிம் மாமலை
வந்துவா னளாவ வளம்பெறு கோபுரம்
விந்தையென் றுலகம் வியப்பவெண் டிசையுங்
கட்டியே குளமுங் கண்தனை தன்னில்
வெட்டி வேண்டிய விசால மூவாயிர
மவணநெல் விதைப்புத் தரையுமோ ரளவுக்
காக்கியே தம்பல கமமெனு மழகுறு
கிராமம ததனிற் கிரிக்கிறை வர்க்கென
வாயினு மோர்போ தரிசிநெல் குறையிற்
பொன்னு லரிசிக் குவியலும் பொக்கிஷ
வைப்பும் வைத்து வழுவில் நித்தியநை
மித்திய மென்றுமெக் காலமு நாட்டிய
குளக்கோ டனனெனுங் கோவினைச் செந்தா
மரைமல ராக்கி மகிழ்வொடு திருவடி
யிருத்தி யென்றரு ளிறைவனே யபயம்,
குளத்தினிற் பூவைக் கொய்வான் சென்றிடு
மடியரொ டமர்புரிந் தாற்றூர் சிங்களர்
தோற்றா சன்முனஞ் சொல்லினர் தங்குறை
கேட்டனன் கய வாகெனுங் கேடிலா
மாட்சி தங்கிய மாபனன் வெகுண்டு
கோபுரத் தொடுநற் குளமு மிடித்து

நாடு மழித்து வருவது நங்கட
னாகு மெனவறு ராச புரத்தை
நீங்கியே கண்தலை நெருங்கியபோது
கண்விழி சிதைந்து கவலை யுறும்படி
யெண்ணிய கோணை யிறைவனே யபயம்,
கலங்கிய வரசன் கண்விழி வேண்ட
விரங்கிய கோணை யீசனே யபயம்,
சிறுகண் தலையி லொருகண் தெரிய
மறுகணும் பெறுவ னெனவழி நோக்கித்
திருமலைக் கருகுறு பெரியகண் தலையதில்
வரவவர்க் கிருகணுந் தெரிய மாமலையை
நோக்கி நொந்துநொந் தயர்ந்து வீழ்ந்தடி
தொழுது நின்றிரு கண்கணீர் சொரியக்
கோணை நாயகனே ! கோணை நாயகனே !
மாநில மேழை மொழிபல விழிமொழிக்
கிருள்நா கெத்தனை யிலக்க நாள்வரை
யிருப்பனோ வவை பொறுப்பனோ வெலாம்
பொறுத்தரு ளெனவருள் புரிந்த பொங்குகங்
கைபிறை யரவணி கடவுளே யபயம்,
முன்குளக் கோட்டர சுவந்து மூட்டிய
பொன்முடி யாலய மடாலயம் பிறவும்
பின்வருமரசர் பிரித்தெறி வாரெனச்
செப்பினர் செப்பிய வண நிகழ்ந்திட
வக்கண மடியவர் திருவுரு வதனைப்
பொக்கென வெடுத்துப் போந்து பூபாலர்
கட்டினில் வைத்துக் காவல்பூண் டவர்கல்
வெட்டினிற் கூறிய வாறு விரைந்துவைத்
திட்டனர் கழனிமா மலையத னிடையெனக்
கண்டநீ கனவிற் களிப்பொடு கண்டி
மாநக ராசறன் மாட்டுச் சென்றுதம்
பலகம மெனும்பதி தன்னிலோ ராலயங்
கட்டிவை யெனையெனக் கழறினோ யபயம்,

அரியய னிருவரு மந்நா ளகந்தைகொண்
டரிவரா கமுமா யயனன வடிவாய்த்
திருவடியொடுமுடி தேடியுங் காணு
வொளிவடி வாயவ ருளச்செருக் கொழித்தருள்
பிரமமே பேரொளிப் பிழம்பே யபயம்,
கல்லால் விருட்சத் தின்கீட் கயிலையி
லெல்லா மறிந்த விறைவநீ குருவா
யிருந்திருக் கொடுயசுர் சாம மதர்வண
மிவைநால் வேதத் தின்சுவைப் பொருளைச்
சனகர் சனந்தரர் சனாதர ரொடுசனற்
குமாரர்நால் முனிவர்க் குரைத்துநன் மோனமு
முணர்த்து மெய்ப்பொருளே யுனதடி யபயம்,
மறலிகைக் கெட்டா மன்னு பெருந்தவம்
புரியுமார்க் கண்டன் புகலருஞ் செயலுக்
கிரங்கி யஞ்சுதியென விலிங்கத் தெழுந்துகைக்
கயிறது கொண்டு கடாமிசை யிருந்து
வீசிய காலனை வீழ வுதைத்தரு
ளீசனே கயிலைக் கிறையே யபயம்,
அவுணரு மமரரு மமிர்தங் கடைந்த
பொழுதெழு நஞ்சைப் புகழ்மிடற் றடக்குங்
கண்டனே காள கழலடி யபயம்,
திருவா சகமெனுந் தேனைச் சொரிந்த
மணிவா சகப்பெரு மானைப் பெருந்துறை
யிடமா யெழுந்தருட் குருவா யிருந்துப
தேசமிட் டருளிய தேவே யபயம்,
கல்லொடு பிணைத்துக் கடலு ளமிழ்த்திய
சொல்லுக் கரசைத் தூக்கிக் கொணர்ந்து
மெல்லக் கரையில் விடுத்தோ யபயம்,
தோணி புரத்துத் தோன்ற லம்மையப்
பாவென வழவெழுந் தருளிப் பாலொடு
ஞானமு மூட்டிநன் குறவெண் முத்தின்
சிவிகையுங் குடையுஞ் சின்னமு மளித்தருள்

சிவனே செம்பொற் கழலடி யபயம்,
பண்டைநாட் செந்தமிழ்ப் பாடுசுந் தரற்காய்ப்
பரவையி னில்லம் பரிந்திரு டன்னிற்
றூதுசென் றிட்ட துணைவனே யபயம்,
தில்லைமன் றுட்டினஞ் செப்பிய பூசைக
ளெல்லா முறைவழி யியற்றி வழிபடுந்
தில்லைமூ வாயிர வர்க்கருள் திரிநேத்
திரமுடை யாயுன் திருவடி யபயம்,
குயவர் குலமதில் வருதிரு நீல
கண்டரு மவரின் கருத்துக் கிசைந்துள
மனைவியு நெடுநாள் மாநில மைம்புல
வேட்கையை வென்றன ரென்ன விரங்கி
யிளமைப் பருவமொ டென்று மிருமெனக்
கயிலையை யருளிய கடவுளே யபயம்,
திடமுறு மியற்பகை நாயனார் பத்தித்
திறமையை யறியவென் றவரிலஞ் சென்றுன்
மனைவியைக் கொடுவென மகிழ்ந்தவர் கொடுத்தே
துணைவழி கொடுபோய்ச் சாக்கா டளவு
மிணையடி பிரியா திருந்திட வினிப்போ
மெனவழி விடவே கிடுமவர் தமையழைத்
தடிமல ரருளிய வப்பனே யபயம்,
குவலயத் திளையான் குடிமாற நாயனார்
ருயர்வுறு வடியவர்க் கூட்டிய தாலமு
திழந்துதன் குபேர சம்பத் தெல்லாம்
மெலிந்தக நலிந்தே மேவிட வறுமை
ஐயனீ யடியவர் போலவ ரகத்துட்
செல்வது கண்டு திகைத்தா ணிலரா
யில்லத் திருந்தவ ரொழுந்து போந்துதப்
வயலிமெனல் முளைதனை வாரியெடுத்துக்
குத்தி யுலர்த்திக் கொணர்ந்தமு தாக்கி
வைத்திட வருள்புரி வள்ளலே யபயம்,
மெய்ப்படி யவர்தம் வேடமே யுலகில்

மெய்ப்பொரு ளெனநிதம் விளங்கி யொழுகிய
மெய்ப்பொரு ணயனார் மெய்மைக் கிரங்கி
முத்தி யருளிய முதலே யபயம்,
சிவனடி யரைமுனுஞ் சிவனே யவர்பினும்
வழிபடு நாய னார்விற மிண்டர்க்
கிரங்கி யிருகண நாதர் தமக்கெலாந்
தலைவ னெனவரு டலைவோ யபயம்,
அமர்நீதி நாய னாரொரு மடியவ
ரிடமொரு தினநின் கோவண மதனை
வைத்துப் போந்தவந் தெங்கென வினவநொந்
தெய்த்துத் தேடியு மெங்கணு மிலாமையாற்
கோவண நிறைக்குக் கொடுத்திட மணிதுணி
நிதிமுதல் யாவும் நிறைகுறைந் திடவயர்ந்
தகமகிழ்ந் தவர்மனை யாட்டியொ டவர்மக
வொப்ப நிறுக்க வுளமகிழ்ந் தவர்தமைச்
செப்பிடு கயிலைவை சிவனே யபயம்,
சிவனடி யவர்துயர் களைவதே தினமுந்
தொழிலென மழுவொடு தோன்றி யிடியே
றெனவெங் கணுந்திரி யெறிபத்த நாய
னார்தமைக் கண நாதர் தலைவனாய்
நீயிரு வெனவருள் நிமலனே யபயம்,
உற்றிடு போரப ஜெயமுறு புரவலன்
நெற்றியில் விபூதிகண் டிட்ட நேரமே
பற்றிய வாயுதம் பதறிக் கைக்கொளா
துற்றிட வுயிர்துறந் திட்டவேனாதி
நாயனார்க் கருளிய நாதனே யபயம்,
திருக்கா ளத்தியிற் றிண்ண னெனுமொரு
வேட னிறைச்சியை வெட்டிச் சுவைத்துநற்
றேனிற் கலந்து திருவமு தூட்டிச்
சிவலிங் கப்பெரு மானே பூசனைத்தினம்
போற்றிப் பணிந்து பிரியா தாகி
யிருந்திட வொருநா ளிரத்தம் வலக்கணிற்

சொரிந்திடக் கண்டுளந் துடிதுடித் தேயெழுந்
திலைபல பிழிந்தெடுத் திட்டுஞ் சுகமுறா
திடவகங் குழைந்துதன் கண்ணை யிடந்தெடுத்
தப்பினன் கண்சுக மாகக் கண்டனன்
கண்டு களித்திடும் போதிடக் கண்ணிலு
மிரத்தஞ் சொரிதர விரங்கி யிதற்குநா
னஞ்சுவ தென்னிடக் கண்ணையு மகழ்ந்ததி
லப்புவ னென்ன வம்பை யெடுத்துத்
தோண்டினன் காளத்தி யப்பநீ தோற்றி
யாண்டிட வவர்தமை யளாவிக் கரத்தினால்
“நில்லு கண்ணப்ப” “நில்லு கண்ணப்ப”
’‘நில்லென் வலக்கைப் பக்கலில் நில்லெனக்”
கட்டி யணைத்தருள் கடவுளே யபயம்,
குங்குலி யங்கொடு தூபமிடுங் குங்
குலியக் கலைய நாயனார் குடங் கையிற்
றாலியை யவிழ்த்துக் கொடுத்தவர் தாரம்
விற்று நெல்லரிசி வேண்டிய யாவும்
வாங்கிடு மென்னப் போந்தவர் வழியில்
வருகுங் குலியப் பொதியை வாங்கி
யாலய மதனிடைத் தூபமிட் டனரவ
ரன்புக் கிரங்கி யவர்மனை தன்னில்
நெல்லு மரிசியு நிதியும் பல்வளக்
குவியலும் வைத்தருள் குருவே யபயம்,
திருப்பனந் தாளிற் சிவலிங்கஞ் சரிந்
திருப்பதை நிமிரும் படிசெய வெண்ணி
யாசனு மங்குள யானைக ளனைத்தையுங்
கட்டியிழுத்து மிழுபடா திருக்க
விட்டுள மிரங்கி விழுந்து மயங்கிக்
கவலை யெனுங்கட றன்னி லமிழ்ந்திடக்
குங்குலியக் கலய நாயனார் குறுகி
லிங்கந் தன்னி லிறுகத் தளைத்த
கயிறதைச் செங்கையாற் கழுத்திற் கட்டி

யிழுத்தன ரன்பெனுந் தளையிற் சிக்கிடு
மொருத்தனே யுனதருட் பார்வையி லிங்கம்
திமிர்ந்திடக் கண்டனர் நின்றனர் புளகங்
கொண்டன ரடியவர்க் கெளியவன் கூத்தென
விண்டனர் விண்ணவர்க் கிறையே யபயம்,
மானக் கஞ்சாற நாயனார் மகள்கவி
யாணத் தன்றடி யவர்போல் வந்தவர்
கூந்தலைப் பஞ்ச வடிக்குத வும்மென
வேந்தின ரரிந்திட் டெந்தைநீ யேந்திக்
கூந்தலு முவந்தவர்க் கீந்தவர் பிதாவுக்
கீந்தனை சிவபத மிறையே யபயம்,
அரிவாட் டாய நாயனார் பூசையில்
மாவடு வரிசிசெங் கீரை வழுவிமண்
மேல்விழ வெகுண்டவர் வெருவி யோரரி
வாழ்கொடு மூட்டியை யரிய வந்தரு
ளாதியே யம்பொற் கழலடி யபயம்.
ஆயர் குலமதி லானாய நாயனார்
வேய்ங்குழ லூதிட வியந்தக மகிழ்ந்தே
கயிலையி லிருந்தென் னடியருன் கானம்
மகிழ்வொடு கேட்க வாசிவா வென்னக்
கொடுசெலுங் கோமளக் குன்றே யபயம்.
மதுரையில் வைசிய மரபில் மூர்த்தி
நாயனா ரால வாயிலில் நாடொறுஞ்
சந்தன மரைத்துக் கொடுத்துத் தரிசனஞ்
செய்பவ ரோர்நாட் செப்பிடு சந்தனக்
கட்டை யிலாமையாற் கல்லில் முழங்கையை
யிரத்தஞ் சிந்த வரைத்தன ரிரங்கிக்
கண்டநீ யன்பின் கடைப்பிடி யிதுவென
மண்டனில் மதுரையை யாண்டு மன்னனாய்
விண்ணுற வருளிய விமலனே யபயம்,
மலர்கொடு வர்த்தமா னேச்சுரத் துறுமுன்
மலரடி வணங்கிநின் றேமந் திபஞ்

சாக்ஷா மலைதச் சரிவர விருந்தோ
திடு முருக நாய னார்க்குச் சிவபத
மிடமென வருளிய விறையே யபயம்,
தடாகத் ததிலூறு நீருட் கழுத்தள
வதனினின் றேகரங் கூப்பி யடிமலர்
போற்றிய பசுபதி நாயனாரைப் புகழ்ந்
தேற்றிடு கயிலைக் கிறையே யபயம்,
புலையர்தங் குலத்திற் புக்கிடு நாளைப்
போவார் நாயனார் திருப்புன் கூரி
லெழுந்தரு ளியவுனை யிறைஞ்ச வேண்டிமு
னிருந்திடு நந்தியை யிடத்தை விட்டுநில்
லவர்பொருட் டெனவறை யப்பனே யபயம்,
தில்லையில் நடமிடு ராசர் தெரிசனஞ்
செய்திட வேண்டு மெனச் சிதம்பரத்
தெல்லையை யடைந்திவ் விழிபிறப் பெனக்கோர்
தடையென நந்தன் தரையில் வீழ்ந்தழுது
துயில்கொளு வேளைசொற் பனத்திற் றோன்றி
யழலிடை மூழ்கிநீ யம்பலத் திருநடத்
திருவடி யடையெனச் செப்பினோ யபயம்,
காஞ்சி புரத்திலே காலியர் குலமதிற்
தோன்றிடு திருக்குறிப் புத்தொண்ட னென்னும்
வண்ணா னிடத்தில் மகிழ்வொ டேகாம்பர
நாதநீ நயந்துன் னிடையணி துணியைத்
தோய்த்துத் தருகெனக் கொடுத்துச் சென்றிட
வொலித்தனன் சிவனே யுனதரு ளால்மழை
பெய்திட வவணியிற் பெருந்துயர்க் கடலுட்
பட்டவன் கலங்கிப் பாவியென் செய்குவ
னென்னக் கல்லி லென்றலை தன்னைச்
சிதறிட வடித்துச் சிதைப்பன் யானென
மோதினன் றலையை மோனமா மூர்த்தி
சர்வ வியாபி சர்வசாட் ஷணியுன்
கையைக் கொடுத்துக் காத்தனைத் தருளிய

கடவுளே கிருபைக் கடலே யபயம்,
சண்டே சுரர்கீதங் கொண்டே சுரபிகள்
மேய்த்துத் திரும்பி மீளுநா ளிலிங்க
மமைத்ததின் மேற்குடம் பாலை யபிடே
கித்தவ ரடிமலர் கிட்டி யருச்சனை
பூசை புரிந்திடு நாளி லவர்பிதா
சீறியே சிதறிடப் பாற்குடம் புடைப்பக்
கண்டனர் கோபங் கொண்டனர் கதறிக்
கொண்டுகூர் மழுவாற் றாளைக் குறைத்தன
ரெந்தைநீ யிடப மேலெழுந்தருளிச்
சண்டே சுரர்பதந் தந்தோ முனக்குத்
தொண்டர் நாயக மாயிரு துதித்துநம்
பூசையில் வைத்திடு புஷ்பமு மமுதும்
பரிவட்டமு முனக்கென் றும் படைப்பரென்
றுரைத்தரு ளடியவ ருளத்தோ யபயம்,
தோற்றிடு சமணரைத் துயருறக் கழுவினி
லேற்றிடு குலச்சிறை நாயனு ரிருகரங்
கூப்பித் தொழுதிடக் கூடலு ளாலவாய்
வீற்றிருந்தருளிய விமலனே யபயம்,
சுந்தரர் கயிலைசேர் வதுநா ளையெனக்
கண்டிடு குறும்ப நாயனார் கருதிடு
மேனிலை யோக வழியினில் மேலுல
கேகிட வருளிய விறையே யபயம்,
காரைக் காலமை கலங்கியின் றன்னருட்
பாரமென் றுருகப் பரிந்துமாங் கனியீந்
தாதர வொடுதிரு வடியின் கீழ்ச்சிவா
னந்தமு மருளிய நாதனே யபயம்.
நாவுக் கரசை நாடொறும் வணங்கிப்
பூசித் திடுமப் பூதி நாயனு
ரமுதிட விலைகொய் வான்மக னரவுதீண்
டுயிர்துறந் திடச்சொற் கோவுள மகிழ்ந்தெழுப்
புதல்கண் டருளிய புனிதனே யபயம்.

சிவலிங் கத்தின் மேல்விழு சிலம்பினை
யூகித் துமிந்த தநுசித மெனத்தன்
தேவியை விலக்கிய திருநீல நக்க
நாயனாரிடங் கனவினில் நண்ணியுன்
மனைவி துமியிட மொழிய மற்றவை
கொப்புள மாயின கோதிலுன் னருமனை
யாட்டியை யாலய மதனின் றேகொடு
செல்கெனச் செப்பிய சாத்த மங்கையி
லெழுந்தருள் சிவனே யீசனே யபயம்,
நம்ப நின்னடிய நமிநந்தி யடிகளைத்
தண்ணிவிட் டெரியெனச் சமணர் கூறியவெஞ்
சொல்லிற் கலங்கியபோது சோதியுன்
கண்ணரு ளாலவர் கலக்கந் தீர்ந்திடத்
திருவா ரூரிற் திருக்கோயி லுள்ளெலாம்
நன்னீர் விட்டொளி நல்விளக் கேற்றினர்
கண்டனர் மகிழ்ந்தனர் கயிலையம் பதிநின்
றண்ணரு ளென்றனர் தயாநிதி யபயம்,
சுந்தரர் பரவையி னில்லந் தூதனைச்
சென்றிட விடச்சின மேற்கொண் டெள்கிய
வேயர்கோன் கலிக் காம நாயனார்
மேலொரு சூலை நோய்தனை விடுத்துக்
சுகமுறிற் சுந்தரர் வருதல்வேண் டும்மெனச்
சுந்தர ரவரிலம் புகுதலுந் துண்ணென
வுயிர்துறந் திடுவ தலா லுயி ரோடிருந்
தவர்முக நோக்குவ திலையென வகத்துறு
துயரொடு முயிர்விடு தூய நாயனார்க்
கருளினை கயிலையென் னப்பனே யபயம்,
திருமூல நாய னார்திரு வாவடு
துறையினில் வந்துதன் தொல்வினை யாற்பசு
மந்தைகள் மேய்த்தவர் மாதவச் சரீரம்
வெந்திட வரசடி மேவி யிருந்துமூ
வாயிர மாண்டெடுத் தோதின ராண்டொரு

பாசுர மாகமு வாயிரம் பாத்திரு
மந்திர மென்னுநன் மாபெரு நூலினை
யுலகத் தவருக் குதவவென் றெண்ணி
யருளிய குருவே யப்பனே யபயம்,
திருவா ரூரெனுந் திருவருட் டலமதிற்
பிறவியிற் குருடெனப் பிறந்திடு தண்டி
யடிக ளையனு ரறஞ்செய விரும்பிக்
குளங்கலச் சமணர் பொறாமைகொண் டவரைத்
தடைசெய வெருண்டுளந் தமியனுக் குலகிற்
றுணை தியாகேச னெனத்துவண் டழுதழு
துரைசெயு மொழிகட் குவந்தவர்க் குலகி
லிருகணுந் தெரிய விரங்கி யிகழ்ந்திடு
சமணர்கள் விழிக ளிழந்து தயங்கியூர்
விட்டே கிடவென விதித்தோ யபயம்,
திருவேற் காட்டிற் செப்பிடு மூர்க்க
நாயனார் சூதில் நாடொறுந் தேடிடு
பொருள்பல கொண்டடி யவரைப் போற்றிநின்
றமுதிட வருளிய வையனே யபயம்,
எந்தையுன் பதமல ரிடைவிடா தேதொழுஞ்
சுந்தரன் திருவடி தஞ்சமென் றிடுசோ
மாசி மாற நாயனார் திருமந்
திரஞ்செபித் துனைவழி படத்தினை யருளிய
வரதனே வாம தேவனே யபயம்,
வன்றொண்ட னென்ன வழியுள லிங்கமேற்
கல்லெறி சாக்கிய ரின்கடுஞ் செயலி
னுள்ளத் தன்பி னுறுதியைக் கண்டுநின்
செட்பொற் பதமருள் சிவனே யபயம்,
திருவாக் கூருறைச் சிறப்புலி நாய
னாடி யவர்க்கு நாடொறு மமுதிட்
டேயுனைப் பூசித் தெண்ணில் பல்புண்ணியஞ்
செய்திட வருளிய தேசிகா வபயம்,
திருச்செங் காட்டிற் சிறுத்தொண்ட நாயனார்

பிள்ளையை யறுத்துப் பெருமமு தூட்டென
வூட்டிய வன்புக் கிரங்கி யுலகெலா
மேத்த மகவையு மெழுப்பி யழைத்தவர்
மூவர்க்கு முத்தி யளித்தோ யபயம்,
கழற்றறி வாருன் கழலடி வணங்கிச்
சேரமான் பெரு மானெனச் செகமுழு
தாண்டுநீ பாணபத் திரர்க்கருள் பாசுரங்
கண்டபோ தேகன திரவிய மவர்க்கீந்
தெழுந்துசுந் தரர்பின் னேகின ரசுவத்
தின்மேற் கயிலைபுக் கெடுத்தோ திடவுலா
வன்பொடு கேட்டவர்க் கருளினோ யபயம்,
கணநாத நாயனார் காழியிற் றோணி
யப்பரை வணங்கி யடியவர்க் குப்பல
தொண்டுகள் செய்துனைத் தொழுதிட வவர்க்குச்
செம்பத மலரருள் தேசிகா வபயம்,
கூற்றுவ நாயனார் குவலய மதனிற்
றோற்றிட வரசரைத் துரத்தித் திக்கெலாம்
போற்றிடப் புகழொடு வாழ்நாட் டில்லையுள்
வீற்றிடு மந்தணர் விளங்கிட மகுடஞ்
சூட்டென மறுக்கத் தொடர்ந்து தில்லையு
ளாட்டிடு முனக்கவை விளம்ப விரங்கிச்
சூட்டினை திருவடி சூட்டிச் செங்கோல்
நாட்டிட வருளிய நாதனே யபயம்,
கடைச்சங் கத்துறு கபிலர்நக் கீரரொ
டேழுழு புலவ ரிருந்துபொய் யடிமை
யில்லாப் புலவர்க ளென்ன வாசொடு
மதுரம் சித்திரம் வித்தார மென்னுநாற்
கவிக ளாலுநற் கனிவுறு தமிழாய்ந்
தொழுகிட வருளிய வொருவனே யபயம்,
புகழ்ச்சோழ நாய னாரெனும் புரவல
னடியவ ரொருவர் சிரமதை யடுபோ
ரிடுதின மறுத்தனர் குடிகெட வெனதொந்

தவர்சிரஞ் சிரமேற் கொடுவக் கினிவலம்
வரவவர் புகவருள் வள்ளலே யபயம்,
நரைசிங்க முனையரைய நாயனு ருலகி
லரசுசெய் தடியவர்க் கமுதளித் தவர்களொவ்
வொருவருக் கொருநூறு பொன்வளங் கிடவருள்
வரதனே மதியணி வள்ளலே யபயம்,
பரத குலத்ததி பத்த னெனுமொரு
நாயனார் நாளு மிழுத்திடு வலையிற்
களித்தொரு மீனெடுத் திறைவர்க் காமென.
விருப்பொடு கடலுள் விடுவா ரொருநா
ளவர்தம் முறுதியை யறியவென் றெண்ணி
யொவ்வோர் தினமுமொவ் வொன்றே படவென
வருளினை யஃதையுங் கடலினு ளவர்விட
விலைமதிப் பில்லா மணிபல வழுத்திய
பொன்மீ னொன்றகப் படலுமப் பொழுதுளக்
களிவொடு மஃதையுங் கடல்விடு மவர்தமை
மனமுவந் தருளும் வள்ளலே யபயம்,
கலிக்கம்ப நாய னார்களித் தடியவ
ரெவரையு மருச்சித் தமுதிடு நாளி
லிவர்நம் பணியி லிருந்தவர் போலுமென்
றடியவ ரொருவரை யவர்மனைக் கிழத்தி
யுரைசெய நீர்வாத் துடனவர் வெகுண்டே
கையை நறுக்கக் கண்டநீ கருதி
யுய்யவென் றல குய்த்தோ யபயம்,
செக்கார் குலமதிற் செப்பிடு கலிய
நாயனார் சக்கரப் பாடியில் நாடொறு
மாலய மதில்விளக் கழகுற வேற்றிப்
புண்ணியஞ் செய்துள பொருளெலா மழிய
மனைவியை விற்றும் வாங்குவா ரின்றிக்
கோவிலை யடைந்துகை கூப்பிநின் றழுது
திருவிளக் குப்பணி சிதையி லிறப்பனென்
றகல்களைப் பரப்பிநின் றதனுளிரத்தம்

நிறைய விடுத்துக் கொளுத்த நினைத்துக்
கழுத்தை யறுத்தனர் கயிலையம் பதிநீ
தோற்றிக் கரத்தைப் பிடித்துத் துயரறச்
சேர்த்தனை சிவபதஞ் சிவனே யபயம்,
பாவ மேற்கொளப் பத்தரை யிகழ்ந்தே
தீயவை கூறுவோர் நாவைத் திருகித்தண்
டாயுதத் தாலிந் தாக்கினை புரியுஞ்
சத்தி நாயனார் தமக்கருள் நல்கிய
சித்தனே திருமலைத் தேவே யபயம்,
ஐயடி கள்கா டவர்கோ னயனா
ருய்திட வுலகாண் டுவந்துநித் தமுமொரு
வெண்பா வியற்றிநின் மெய்ப்பதம் பரவிட
வொண்பா தம்மரு ளொருவனே யபயம்,
கணம்புல்ல நாய னார்கசிந் துருகி
மணங்கொளத் திருவிளக் கேற்றிய தாலுள
பொருளெலா மிழந்திப் புவிதனிற் புல்விற்
றெரித்தனர் புல்லு மெஞ்சிட விலையிலா
தெரித்தனர் புல்லைப் புல்லு மெரிந்தொழிந்
திடப்புரி முடிமடுத் தெரித்திட வருளிய
விடமிடற் றண்ணலே விமலனே யபயம்,
பாரினிற் தமிழிற் பாண்டித் தியமுறு
காரி நாயனார் கசிவொடுன் மலரடி
பேணியே பணியப் பெரும்பத முவந்தருள்
வானவர் கோவே வள்ளலே யபயம்,
நின்ற சீர்நெடு மாற நாயனார்
மங்கையர்க் கரசியை மணந்துமா மதுரையை
யாண்டுனைக் கூடலு ளாலவா யாயென
வேண்டிட நிதமருள் விமலனே யபயம்.
வாயிலார் நாய னார்மகிழ் ஞான
பூசை புரிந்துனைப் போற்றிப் பணிந்திடப்
பாசம தறுத்தருள் பரமனே யபயம்,
போரினிற் தோற்றிடு பவர்க்குத் துணைபோய்ப்

போர்புரிந் தேற்றிடு பொருள்கொண் டடியார்க்
காற்றிட வமுதளித் திடுமுனை யடுவார்
நாயனுர்க் கருளிய நாதனே யபயம்,
கழற்சிங்க நாய னாரவர் கருதிடு
கிழத்தியோர் நாட்கீழ்க் கிடந்திடு மலரை
யெடுத்துமோந் திடமலர் மண்டப மதனிடைச்
செருத்துணை நாய னார்சினந் தவர்மூக்
கரிந்திடக் கண்ட வவர்கா தலனவர்
கையையன் றேமுதற் களைய வேண்டுமென்
றெடுத்துடை வாள்கொடு துணித்தன னெனவருள்
கொடுத்துல கருளிய குருவே யபயம்,
இடங்கழி நாய னொரொனு மாசே
றிடங்கோட் டாகா ரத்து ளிருந்த நெல்
லெடுத்தன னடியா னொருவ னெனவவ
ரிடத்தினிற் கொடுவா விறஞ்சிநின் றமுதுக்
கெடுத்தன னென்ன விரங்கிநெற் குவியலோ
டெடுத்திடு மெனநிதிக் குவியலு மளித்திட
வவர்க்கரு ளப்பனே ஐயனே யபயம்,
செருத்துணை நாய னார்கழற் சிங்கர்
மருவிடு மனைவிமா மலர்மண் டபமதில்
முகந்தனள் பூவென மூக்கரிந் தவர்தமைத்
தடிந்திட வருளிய தலைவனே யபயம்,
புகழ்த்துணை நாய னார்க்கருள் புரியவென்
றுகர்து று பீடத் தின்கீழ் நிலத்தில்
வைத்தவர்க் குச்செல வுக்கா மெனவொரு
காசுநித் தியமருள் கடவுளே யபயம்.
திருவமு தக்கெனச் சேமித் திடுநெற்
குவியலை யுறவினர் தொடுதல் கூடாதெனச்
செப்பிப் போர்முனை நோக்கிச் சென்றிடு
கோட்புலி நாய னாரவர் கொள்கையை
மறுத்துப் பஞ்சம் வரப்பசி யாற்று
தெஞ்சா துளநெல் முழுவது மெடுத்திட

வந்தவர் கண்டு வாள்கொண் டவர்தமைத்
துண்டிடக் கண்டருள் துணைவனே யபயம்,,
தொண்ட ரடிதொழு தல்முத லாயவெண்
குணமுடை பத்தராய்ப் பணிபவர்க் கொருகுறை
யின்றிநின் றருளு மிறைவனே யபயம்,
சுவதந் திரமுடைத் தொல்லோ யுனக்கலாற்
பரதந்திர முடைப் பாவிகட் குக்குடி
யல்லே மெனவருள் வழியமர்ந் தொழுகிடும்
பரமனைப் பாடு பவர்க்குப் பதமரு
ளொருவனே யுலகி லுனதடி யபயம்,
சித்தத் தைச்சிவன் பாலே வைத்துநின்
றட்டாங்க யோகத் தமர்ந் தமிர்தம்முணுஞ்
சித்தயோ கியர்க்கருள் சிவனே யபயம்,
திருவா ரூர்ப்பிறந் திடுபவ ரெல்லாஞ்
சிவகண நாத ரெனத்திரு வாய்மலர்ந்
தவர்தமக் கருளிடு மப்பனே யபயம்.
கௌசிகர் காசிபர் பாரத் துவாசர்
கௌதம ரகத்திய ரெனுமவர் கோத்திரத்
துறுபிரா மணசிவா கமவியுற் பனரவர்
முப்பொழு துந்திரு மேனி தீண்டிமுப்
பழமொடு பால்வைத் தருள்வழி வழிபடு
மவர்க்கரு ளப்பனே ஐயனே யபயம்,
கற்ப மனுகற்ப முபகற்ப மென்றறை
தீற்றை யுத்தூளன மாய்நிதம் பூசிடு
முழுநீறு பூசு முனிவருள் ளத்திருந்
தருள்கூ ரம்பலத் தரசே யபயம்,
சேர சோழ பாண்டிய ரெல்லைக்
கப்பா லுளதிருத் தொண்ட ரவர்தமக்
கப்பா லும்மடி சார்ந்தவர் தமக்கெலாம்
முத்தி யருளிய முதலே யபயம்,
நாயனர் பூச லார்பொரு ளின்றி
மனமிக வருந்திநின் றேமனே பாவனை

யில்லடி நிலையிட் டேநெடு நாளா
யாலயங் கட்டி யதிற் பிரதிட்டை
செய்ய நாணிய மித்தனர் சிந்தையிற்
காடவ ராசனுங் காஞ்சீ புரத்திலோ
ராலயங் கட்டி யதிற் பிரதிட்டை
செயவித் தினமொரு நாளெனச் செப்பின
னுய்யவென் றுலக மூவந்தருட் டிறத்தைக்
காட்டிட வேண்டிக் கருணையங் கடனீ
தோற்றிச் சொற்பனத் தோன்றலே நாளைப்
பூசலார் கோயிற் பிரதிட்டை போய்விடு
வேனுன் றினமதை வேறொரு தினமதில்
வையெனச் செப்பிய வடிவே யபயம்,
மங்கையர்க் கரசி மகாபெருந் தேவி
யங்கைமா மலர்கொண் டர்ச்சித் திடநிதஞ்
செம்பொற் பதமருள் சிவனே யபயம்,
சாலியர் குலத்திற் சனித்திடு நேச
நாயனார் நல்வஸ்திரமொடு கோவண
மாம்பல நெய்தடி யவர்க்கு நல்கிடப்
பேரரு ளளித்திடு பிஞ்ஞகா வபயம்,
சிவலிங் கத்திற் சருகுதி ராவணஞ்
சிலந்திதன் னூலாற் கட்டி மேற்செயச்
சிதைத்தநு சிதயெனச் சீறிய யானையின்
புழைக்கையி னுட்புகுந் தேநற் சிலந்தி
கடிக்கவெள் ளானையுங் கையை நிலத்தி
லடித்துமோ தியதா லழிந்ததன் கையுட்
சிலந்தியு மாவி யிழுந்ததுன் செயலா
லானை சிவகண நாத ராகிடச்
சிலந்தியுங் கோச்செங் கட்சோழ னாகிப்
பிறந்தர சாண்டு பிறவித் துயர்களைந்
திறந்திடக் கயிலை யீய்ந்தோ யபயம்,
நினந்திரு நீல கண்டயாழ்ப் பாணர்
சொக்க நாத சுவாமி வாயிலில்

யாழினை யிட்டுப் பாணிகள் பாடிடக்
கேட்டநீ கசிந்துன் னருகிருந் தேகிதம்
பாடென வருளிய பரமனே யபயம்,
எந்தை சுந்தர மூர்த்தி சுவாமியின்
தந்தையார் சடைய நாயனார் தாயிசை
ஞானியா ரெனுமிரு வர்க்குஞா லத்திடை
யோதிடு முத்தி யுதவினோ யபயம்,
சேக்கிளார் நாய னார்க்குத் திருவருள்
வாக்கினு "லுலகெலா" மெனவடி யெடுத்துக்
கொடுத்திடப் பாடி முடித்தனர் கோதறு
மடியவர் சரித மதனைப் பெரிய
புராணமதெனவருள் போதனே யபயம்,
"மதிமலி புரிசை மாடக்கூட"
லெனுமொரு பாசுர மெழுதிப் பாண
பத்திரர் கையிற் கொடுத்துப் பார்தனை
யாண்டிடு சேரன் கைக்கொடுத் தவனிடம்
வேண்டிடு பொருள்பெறு கென்ன விரங்கி
யாண்டருள் சுரந்தவென் னப்பனே யபயம்,
பட்டினத் தடிகள் பாரினிற் குபேர
சம்பத் தடைந்து சஞ்சல மின்றி
வாழு நாளில் "வாராது காதற்ற
ஊசியுங் கடைவழிக்" கென்ன வுறுத்திய
பாசுர மெழுதிய பரமனே யபயம்,
தருமி யென்னுமந் தணனோர் நாளுறு
மிடியினு லாயிரம் பொன்பெற வேண்டி
யால வாயி லமர்ந்திடு சோம
சுந்தரா வருளென வுனைத் துதித்திடக்
"கொங்குதேர் வாழ்க்கை" யென்றுகூ றிடுமொரு
பாசுர மருளிய பரமனே யபயம்,
"அன்பு சிவமிரண் டென்ப ரறிவில
ரன்பே சிவமாவ தாரு மறிகில"
ரென்ன மூல னெடுத்து மொழிந்திடு

மந்திர மதனை மனத்தி லிருத்தி யுன்
னடிபர விடநித மாவ லாயினேன்
திருவருள் புரிவதுன் றிருக்குறிப் பெனவே
பதமலர் விழுந்தடி பணிந்தே னபயம்,
பண்டுள வினையாற் பற்பல வுலகஞ்
சென்று சென்று செறிந்து பிறந்து
புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய்ப் பலவாய்
நால்வகைத் தோற்றமு நவிலெழு விறப்பு
மெனும்பே தத்தூறு மெண்பத்து நான்குநூ
றுயிர பேத யோனிக ளவையுட்
பிறந்து பிறந்தும் பெயர்ந்து நான்றிரிந்து
மானிட னாகி மாநிலத் துதித்துச்
சைவ மென்னுஞ் சமயத் திருந்துஞ்
சரியை வழியையுஞ் சாரா தொழிந்தேன்
கிரியை வழியையுங் கிட்டா தொழிந்தேன்
யோகத் தினையு முணரா தொழிந்தேன்
ஞானத்தினையு நவிலா தொழிந்தேன்
மெய்யறி வாளர் விளம்பு மொழிகளைப்
பொய்யெனத் தள்ளிப் பொருட் படுத்தாம
லெள்ளித் திரிந்தனென் னப்பனே யபயம்,
பிறந்தநா ளொட்டுப் பிரபஞ் சத்து
ளழுந்திக் கிடந்தலைப் பட்டே னபயம்,
நானெனு மகந்தைநற் றொழுநா யினமின்
மாநிலத் தெவரையு மதியே னபயம்,
எனதென் செருக்கினை யெந்தநா ளும்விட்
டகலா திருப்பதை யறியே னபயம்,
உலகினுள் பொருள்கள் நிலையுள வென்று
நவிலத் துணிந்தனென் னாதனே யபயம்,
பொன்னொடு பூஷணம் பொக்கிஷ மாமிவை
யென்கைப் பொருளென் றிருந்தே னபயம்,
மாடமென் மாளிகை மற்றுள கூடமுங்
கூட வருமெனக் கூறினே னபயம்,

மாதர்கள் கூட்டமு மகிழ்ச்சியும் போகமு
மாதா வெனவென் றிருந்தே னபயம்,
தோப்பொடு வயலுந் துரைத்தன பீடமுங்
காப்பென் கைப்பொரு ளென்றே னபயம்,
காணியும் பூமியுங் காசும் பணமும்
பேணியென் பொருளெனப் பேசினே னபயம்,
உத்தி யோகமும் பட்டமு முலகி
னித்திய மாமென நினைந்தே னபயம்,
மாளிகை யடுக்கு மணிமே டைகளுஞ்
செங்கோல் மணிமுடி சிங்காதனமு
மானையும் பரியு மாரமுஞ் சிவிகையுந்
தேருந் திக்குள சேனையுந் திறமையு
மாயுத சாலையு மரண்கா வல்களும்
நீருளு நீர்மே லோடுங் கப்பலும்
வானொடு ரதமுமண் மேலொடு ரதமு
மாமிவை யாவு மழிவில நிலையுள
வாமென வார்ப்பரித் திருந்தே னபயம்,
அந்தக னெழுது மோலைகொண் டவன்றன்
றூதுவர் வருவார் துடுக்கென வாவி
கொடுசெல வந்தோ கூவென் றழுவ
ரப்போ திந்த வவனியி லேழை
நத்தி யிருந்த நவநிதி யெல்லாம்
விட்டே கிடவரு மிவ்வாழ் வனித்திய
மிந்திர சால மெதிர்ப்படு கானனீ
ரசத்தொடு கனவுமட் பாண்ட மறிவிலா
ரெடுத்து மகிழ்வுறு மெண்சா ணுடம்பு
நவவழி கொண்ட நடமிடு சாலை
மோக மெனுமொரு பெட்டி மும்மல
மொழுகு கேணியுட் கிருமிமொய்த் துக்கக்
திடவுளல் கும்பிநித் தியஞ்சோ றிடுகொட்
டஃகைநாய் நரிகழு கக்களிப் பொடுமொய்த்
தணுபொய் யுடலைத் துணையெனக் கொள்ளாமல்

"தந்தையார் தாயா ருடன்பிறந் தாரா":
சென்று சொற் கோவுமெடுத்து மொழிந்ததைச்
சிந்தையுட் கொண்டுன் திருவடி யபய
மென்று வந்தன னிரங்கிட வேண்டுமென்
னப்பனே யுலகி லிருக்குநா ளளவும்
விதித்தன செயவும் விலக்கிய விடவு
முலகத் தவரோ டொட்டி யொழுகவும்
யாவர் மாட்டு மன்பு மருளு
முறவு முபசரிப் புடைமையுங் குணமு
மைம்பொறி யடக்கலும் விரதங் காத்தலும்
தவமுந் தானமுந் தன்னின்மூத் தார்வசம்
வணக்கமு முண்மையு மடக்கமும் பிறர்மனை
வரைவின் மகளிர் விழையாமையும் வேண்டினேன்,
பஞ்சமா பாதக மென்றுபே ரிட்டிடுங்
களவையுங் கொலையையுங் கள்ளையும் பொய்யையுங்
காம மெனும்பெருங் கடிய நெருப்பையுங்
கனவிலு மணுகா திருக்கவும் வேண்டினேன்,
அன்பொடு மாமலர் மரங்க ளாக்கவு
மம்மலர் பறிக்கவு மழகு தார்பல
சமைக்கவுஞ் சமய குரவர் பாடல்கள்
படிக்கவும் பாடவும் பணிந்து போற்றவு
மாலய மலகிட மெழுகிட வன்பொடு
நல்விளக் கிடவு நல்லடி யரேவிடு
தொண்டுகள் செயவு மெனத்தொகுத் திடுநற்
சரியையின் வழியிற் றவரு தொழுகிச்
சாலோக மென்னுநற் பதவியைச் சார்ந்துன்
னுலகினி லிருக்கு முதவியைப் பெறவும்,
வாசனை திரவியம் மணங்கமழ் தூபம்
புனித மஞ்சனம் பொற்புறு தீபஞ்
சுகந்த புஷ்பம தொடுபல பூசோ
கரணங் களையுங் கைக்கொடு சென்று
காமம தகற்றிக் கருதிடு பஞ்ச

சத்திய மகத்தொடு புறத்துப் பூசையு
மங்கியின் கடனுங் கழித்தருள் வழிசெலுங்
கிரியையின் வழியிற் கிரமமா யொழுகிச்
சாமீப மென்னுநற் பதவியைச் சார்ந்துன்
னருகினி லிருக்குமுன் னருளைப் பெறவும்,
அடக்கி ஐம்புலனொடு குணத்தையும் வாயுவை
யெழுப்பிடு மிருவழி யடைத்தொரு வழியைச்
சிக்கெனத் திறந்து சிலம்பொலி யுடன்போய்
யஞ்செழுத் தோரெழுத் தாவது கண்டவ்
வருள்வழி புகுந்து பரவெளி லயிக்கும்
யோக வழியினை யோதி யுணர்ந்தே
சாரூப மென்னுநற் பதவியைச் சார்ந்துன்
னுருவைப் பொருந்திடு முறவைப் பெறவும்,
விரிந்திடு கலையும் விளங்கு மாகமமும்
பலதிறச் சமய சாத்திரப் பகுதியுந்
தெளிந்து தேர்ந்ததிற் றிரிபதார்த் தத்தின்
பொருளதே முக்கிய மெனப் பொருட் படுத்திச்
சிற்றறி வகற்றிச் சிவபோ தந்தரும்
ஞான வழியினில் நானித மொழுகிச்
சத்தி முத்தி யெனச்சொலு நிலையைப்
பெற்றிரண் டறக் கலத்த லெனும்பெருஞ்
சாயுச் சியமெனும் பதவியைச் சாரவு,
மருள்செய வேண்டு மருள்செய வேண்டு!
மப்பனே! கோனே யப்பனே கோனே
யெப்பிழை யும்பொறுத் தென்னையாட் கொள்ள
வேண்டும்! வேண்டும்! விண்ணவர் கோவே!
மண்ணிடை வாழ்வில் மயங்கிக் கிடந்துல
கெண்ணில் பல்பிறவி யெடுக்கா வண்ணங்
கண்ணருள் செய்தென் கலக்கந் தீர்த்துநின்
பொன்னடிக் கமலம் பொருந்த வைப்பதுன்
பார மையனே! பரமனே யபய
மபய மபயமுன் திருவடிக் கபயம்,

காலனுர் தூதர் கருதியென் னுயிரைக்
கொடுசெல வரும்போ தீசனே ! கோண
நாதனே ! வெள்விடை மீதினில் நாயகி
பாகம துறவெழுந் தருளி யென் பயந்
தீர்த்தருள் செய்தெனை யஞ்ச லென்பதுன்
மேற்கட னெனவிழுந் தழுது சொல்வதைக்
கேட்டிட வேண்டுங் கிரிக்கிறை யேதிருக்
கோணமா மலையுறை கோணநா யகனே! —

---

விருத்தம்

திருக்கோண நாதர்திரு வடிக்கபய மபயமெனச்
செப்பிடுமிவ் வகவற் பாவை
யுருக்கமொடு வாசிப்போர் கேட்போர் நாளுமோதுவோ
ருலகினிடை யின்பமெய்திப்
பெருக்கமொடு வாழ்ந்து பௌவப் பிறவிநீந்திப் பேரின்ப
வாழ்வதனைப் பெற்றுவானத்
திருக்கவருள் புரியுமரன் றிருத்தாடஞ்ச மெனத்தொழுவா
ருளத்தொடுங்கி யிருப்பன் றானே.

திருச்சிற்றம்பலம்

முற்றும்